
மாலை முரசு

பக்கங்கள் 15+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 05 வியாழக்கிழமை 19.06.2025 | அதிர்வு 320


## மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி
# செம்மணியில் நாளை மாபெரும் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)



செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப் பாணத்தில் 03


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# சுயேச்சைக் குழு – சைக்கிள் – மான் இணைந்து காரைநகர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பு

## தவிசாளராகக் கிருஷ்ணன் கோவிந்தராஜன் தெரிவு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

சுயேச்சைக் குழு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன இணைந்து யாழ். காரைநகர் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள் ளன. 03






# வலி. மேற்கில் தமிழரசு ஆட்சி

## தவிசாளரானார் சண்முகநாதன் ஜெயந்தன்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவானார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது. 03



# சங்குக் கூட்டணி உறுப்பினர் ஒருவர் கட்சியில் இருந்து இடைநிறுத்தம்!

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிலைப்பாட்டுக்கு மாறாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை வாக்களிப்பின் போது செயற்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர், கட்சி உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அவரிடம் விளக்கமும் கோரப்பட்டுள்ளது. 02

# வலி. தெற்கு பிரதேச சபையிலும் தமிழரசு ஆட்சி

## மீண்டும் தவிசாளராக தியாகராஜா பிரகாஷ் தெரிவு





(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஷ் தெரிவானார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் வலிகாமம் தெற்கு 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வலி. தெற்கு...**

பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

31 உறுப்பினர்களைக் கொண்ட வலி காமம் தெற்கு பிரதேச சபைக்காக நடை பெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத்தமிழரசுக் கட்சி 13 ஆசனங் களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 5 ஆசனங்களையும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில், இன்றைய தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தியாகராஜா பிரகாஷ் முன் மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் கருணை நாதன் அபராசுதன் முன்மொழியப்பட்டார்.

பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தியாக ராஜா பிரகாஷ் 14 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட கருணைநாதன் அபராசுதன் 12 வாக்குகளையும் பெற்ற னர். 5 உறுப்பினர்கள் வாக்களிக்காது நடுநிலை வகித்தனர்.

இதன் மூலம் வலிகாமம் தெற்கு பிர தேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஷ் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட செல்வரத்தினம் உதயகுமாரன் தெரி வானார்.









**சங்குக்கூட்டணி...**

இன்று நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவின் போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அறிவுறுத்தலுக்கு மாறாகச் செயற்பட்ட கட்சியின் பிரதேச சபை உறுப் பினர் மார்க்கண்டு குமாருக்குக் கட்சி யின் பொதுச்செயலாளர் நா.இரட்ணலிங் கத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "இன்று நடை பெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின் போது கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் எதிர்த்து வாக்களித்துள்ளீர்கள். ஆகையால் உட னடியாக அமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடைநிறுத்தப்படுகின்றீர்கள்.

தங்களது இந்த நடவடிக்கை சம்பந்த மான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்துக்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கட்சியில் இருந்தும் பிரதேச சபை உறுப் பினர் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள்." – என்றுள்ளது.

இன்று இடம்பெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின்போது தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சண்முகநாதன் ஜெயந்தனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தர்மலிங்கம் சுப்பிரமணியம் நந்தகுமாரும் முன்மொழியப்பட்டனர்.

இதன்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் மார்க் கண்டு குமார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர் வேட்பாளரான சண்முகநாதன் ஜெயந்தனுக்கு வாக்க ளித்திருந்தார்.

பின்னர் அவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் சென்று தான் தவறுதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்து விட்டதாகவும், தனது வாக்கை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப் பினருக்கு மாற்றுமாறும் கோரினார். எனினும், குறித்த வாக்கு பதியப்பட்டு விட்டதாகவும், அதனை மாற்ற முடியாது எனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தெரிவித்தார்.

இதேவேளை, உப தவிசாளர் தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் வேட்பாளருக்கு எதிராக மார்க்கண்டு குமார் வாக்களித்தமை குறிப்பிடத்தக் கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சுயேச்சைக்குழு...**

அதற்கமைய காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராகச் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்த ராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் பிரதேச சபையின் தவி சாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்தராஜன் முன் மொழியப்பட்டார்.

சபையில் வேறு எந்த முன்மொழிவு களும் இல்லாத நிலையில் கிருஷ்ணன் கோவிந்தராஜன் காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவின் போது தமிழ் மக்கள் கூட்டணி யைச் சேர்ந்த ஆண்டிஐயா விஜயராஜா முன்மொழியப்பட்டார்.

சபையில் வேறு எந்த முன்மொழிவு களும் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த ஆண்டிஐயா விஜயராஜா உப தவிசாளராக ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார்.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரை நகர் பிரதேச சபையில், சுயேச்சைக் குழு, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தலா இரண்டு உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஓர் உறுப்பினரும் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் சுயேச்சைக் குழு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன ஆட்சி அதிகாரத்தை தலா 16 மாதங்கள் பங்கிடு வதற்கான எழுத்து மூல ஒப்பந்தத்தை நேற்று மேற்கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

**வலி. மேற்கில்...**

26 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 10 ஆசனங் களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடை பெற்றது.

இதன்போது தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சண்முகநாதன் ஜெயந்தன் 15 வாக்குகளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தர்மலிங்கம் சுப்பிரமணியம் நந்தகுமார் 7 வாக்குகளையும் பெற்றனர்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கந் தையா இலங்கேஸ்வரன் தெரிவா னார்.

**செம்மணியில்...**

மாபெரும் போராட்டம் நடைபெறவுள் ளது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப் புக் குழுவின் ஏற்பாட்டில் செம்மணிப் பகுதியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சிவலோகசுந்தரம்



நெல்லியடி, யார்வத்தை வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவலோகசுந்தரம் 19.06.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – மீனாட்சிப் பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் – கற்பகம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சாரதாதேவி, இந்திராணி, சாம்பசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகௌரி, சிவகுமார் (இலங்கை மின்சார சபை – சுன்னாகம்), திருச்செந்தூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னார் சுதாகரன் (பல நோக்கு கூட்டுறவு சங்கம், பளை), மயூரிகா (குடும்ப நல உத்தியோகத்தர் கரவெட்டி), சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை, கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கம்சாயினி, சங்கீத், சஞ்சய், ஹர்னிகன், ஹக்சினி, அஸ்விகா, அக்ஷயன், அக்ஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் இரண்டு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு பெரியானோடை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:

**சி. சிவகுமார் (மகன்) -0772269891**

**சி. திருச்செந்தூரன்( மகன்) -0779496977**

**சிவகௌரி( மகள்) -0771486988**

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

# கெஹலியவின் மற்றைய இரண்டு மகள்களும் மருமகனும் கைதாகிப் பிணையில் விடுவிப்பு!

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று வியாழக்கிழமை முற்பகல் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களையும் மருமகனையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களும் மருமகனும் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

134 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சொத்து விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களும் மருமகனும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் இன்று காலை முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று புதன்கிழமை கைது செய்யப்ப ட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோர் நேற்று சொத்து விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிணை நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றியதால், நீதிமன்ற உத்தரவின் கீழ் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.




# முல்லைத்தீவில் கடலுக்குச் சென்ற மீனவர் மாயம்!

## படகு மீட்பு; தொடர்கின்றது தேடுதல் வேட்டை

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, தீர்த்தக்கரை கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல்போயுள்ளார். அவரின் படகு நடுக்கடலில் மீட்கப்பட்டுள்ளதுடன் அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்று அதிகாலை முல்லைத்தீவு, கள்ளப்பாடு, தீர்த்தக்கரைப் பகுதியில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற வேளை படகு ஒன்று நடுக் கடலில் தனியாக யாருமற்ற நிலையில் மிதந்து வந்துள்ளது. அந்தப் படகில் காணாமல்போன மீனவரின் சாரம் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து மேற்படி மீனவரின் உறவினர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மீனவரை 8 படகுகளில் தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான வின்சன்டிப் போல் அருமைராசா என்பரே காணாமல்போயுள்ளார்.







நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# போதையில் சிக்கும் இளமை

இலங்கையில் கட்டுப்படுத்த முடியாத சமூகச் சீரழிவை ஏற்படுத்துகின்ற பெரும் கொடூரமாகப் போதைப் பொருள் பாவனை மாறி வருகிறது. குறிப்பாக நமது எதிர்கால வளமான இளம் சந்ததியினர் போதைப் பொருள் பாவனைக்குள் சிக்கித் தங்களையும் சீரழித்து, சமூகத்தையும் நாசமாக்கி வருகின்றனர்.

சமூகத்தினால் - சட்டத்தினால் - கட்டுப்படுத்த முடியாத நாசகார சக்தியாக போதைப்பொருள் பாவனை விவகாரம் விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

மாறி மாறி வந்த அரசுகளும், நிர்வாகங்களும், அதிகாரிகளும் போதைப் பொருள்களுக்கு எதிராக - அதன் பாவனையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், கடத்தல்காரர்களுக்கு எதிராக - அவ்வப்போது தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் கூட, வெட்ட வெட்ட முளைக்கும் களை போல இந்த விவகாரம் சமூகத்துக்குள் ஊடுருவி, அதனை நாசமாக்கும் தன் கைங்கரியத்தைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

அதேசமயம் மக்களுக்குச் சீரழிவு ஏற்படுகின்ற மது, சிகரெட் போன்ற போதை தரும் பழக்கங்களும் குறைவதாக இல்லை. அவையும் மறுபுறத்தில் முனைப்புப் பெற்று வருகின்றன எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன

இலங்கையில் 15 முதல் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 11.6 சதவீதம் பேர் தீவிரமாக புகைப் பிடிப்பவர்களாகவும், 18 சதவீதம் பேர் தீவிரமாக மது அருந்துவதாகவும் உள்ளனர் என்பதை சமீபத்திய ஆய்வு ஒன்று வெளிப்படுத்துகிறது.

அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் சேவைகளை வழங்குவதன் மூலம் மது மற்றும் புகையிலை பயன்பாட்டைக் குறைப்பதை ஊக்குவிக்கும் ஒரு வள மையமாக இருக்கும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் 11 மாவட்டங்களில் இந்தப் புள்ளிவிவரக் கணக்கெடுப்பை நடத்தி பெறுபேறுகளை வெளியிட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களில் தீவிரமாகப் புகைப்பிடிப்பவர்கள் மற்றும் தீவிரமாக மது அருந்துபவர்கள் பற்றிய புள்ளிவிவரம்தான் இது. மது மற்றும் புகைப்பிடித்தலை பரிச்சயமாகக் கொண்டிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை இதில் அடங்காது. இளவட்டத்தை தாண்டும் போது இப்போது பரிச்சயம் கொண்டிருப்பவர்கள் பின்னர் பாவனையாளர்களாகி, அந்தப் பாவனைக்கு அடிமைகளாகும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

அது மாத்திரமல்ல, பாடசாலைக் காலத்தில் புகைப்பிடித்தல் மற்றும் மது பாவனைக்கு தாராளமாக உட்படும் சிறார்கள் இலகுவில் பிற நாசக்கார போதைப் பொருள்களின் பாவனைக்கு அடிமையாகும் வாய்ப்புகளும் அதிகம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமீபகாலமாக பாடசாலை மாணவர்களிடையே புகையிலைக்கு அடிமையாகும் பழக்கம் அதிகரித்து வருகின்றமையால் இது நாட்டின் எதிர்காலத் தலைவர்களின் நல்வாழ்வைக் கேள்விக்குறியாக்கும் நிலைக்குக் கொண்டு செல்கின்றது. வளர்ந்து வரும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அவசரத் தேவை என மனநல மருத்துவர் ரூமி ரூபன் சுட்டிக் காட்டியுள்ளார்.

புகையிலைப் பொருள்களினால் ஓர் இரகசிய இன்பத்திற்கு அப்பால் சிறுவர்கள் சென்றுவிட்டனர் எனவும், பல சிறுவர்கள் இப்போது வகுப்பறைகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வெளிப்புற கற்றல் பகுதிகள் போன்ற இடங்களில் அவற்றைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் உணர்த்துகின்றார்.

புகையிலைக்கு அடிமையான சிறுவர்கள் தாமதமின்றி மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இது பெற்றோர் சிரத்தை எடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.



### கட்டைபறிச்சானில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்

# ஆசிரியர், பௌதீகவள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம்



**(ஹஸ்பர் ஏ.எச்)**

கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர், பௌதீகவள பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் இன்று வியாழக்கிழமை (19) காலை பாடசாலைக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கான கணிதம், வர்த்தகம், சிங்களம், சமயம், ஐ.சி.ரி., ஆசிரியர் இன்மை, பௌதீக வளங்கள் இன்மை, போன்ற பிரச்சினைகளைச் சீர்செய்து தருமாறு கல்வி நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவொரு தீர்வும் கிட்டவில்லை.

ஆதலால் குறிப்பிட்ட பாடங்களுக்குஆசிரியர்பற்றாக்குறைகாணப்படுகிறது எனவும் இதனை நிவர்த்தி செய்து தருமாறும் கோரியும் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சுலோகங்களை ஏந்தி கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# 73 ஆயிரத்து 400 வாகனங்கள் ஆறு மாத காலத்தில் பதிவாகின!

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை தொடர்ந்து இந்த ஆண்டு ஜனவரி முதல் 73,400 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையர் ஜெனரல் கமல் அமரசிங்க இது தொடர்பில் கூறுகையில்,

இந்த வாகனங்களில் அதிக எண்ணிக்கையிலானவை மோட்டார் சைக்கிள்கள். சுமார் 58,947 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

7,500 கார்கள் மற்றும் 1,666 ஓட்டோகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் அதிக எண்ணிக்கையிலான பதிவுகள் நடந்துள்ளன.- என்றார்.

# சுதேச வைத்திய பணியிடங்களை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்குக!

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் வேண்டுகோள்

**(விஜயரத்தினம் சரவணன்)**

நாட்டில் அதிகரித்துள்ள சனத்தொகைக்கு ஏற்றவாறு, நாடளாவிய ரீதியில் ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி ஆகிய சுதேச வைத்திய பணியிடங்களை விஸ்தரிப்புச் செய்வதுடன், நாடளாவிய ரீதியில் சுதேச வைத்திய அதிகாரிகளின் நியமனங்களையும் அதிகரிக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அமைச்சரவை அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றில் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.



அதேவேளை நாட்டின் சனத்தொகையின் அடிப்படையில் சுதேசவைத்திய பணியிடங்கள் அதிகரிக்கப்பட்டால், 4,682 சுதேச வைத்திய அதிகாரிகளும், 2,341 சுதேச சி.எம்.ஓ. அதிகாரிகளுமாக நாடளாவிய ரீதியில் மொத்தம் 7,023 சுதேச வைத்திய அதிகாரிகளை நியமனம் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். இதன்மூலம் நாட்டின் சுகாதார சேவையை மேம்படுத்த முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று (18) உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் சுதேச வைத்தியக் கல்வியைப் பூர்த்தி செய்து வைத்தியர் தகுதி பெற்ற பல சுதேசவைத்தியர்கள் வேலை வாய்ப்பின்றி காணப்படுகின்றனர். அவை எமது மக்களின் கலாச்சார மற்றும் பண்பாட்டுடன் இணைந்த வளர்ச்சியாலும் சுகாதார சேவைக்கான தேவைகளாலும் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. எமது சித்த, ஆயுள்வேத மற்றும் யுனானி மருத்துவங்கள் எமது நாட்டின் கிராமப் புறங்களிலும், பொருளாதார ரீதியாக பின்தங்கிக்காணப்படும் பகுதிகளிலும், மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் நிலையான மிகப்பெரும் பங்கை வகிக்கின்றன. எனினும் அரச சுதேச வைத்திய அதிகாரிகள் நியமனங்களின் பற்றாக்குறையால் இவர்களது தேவை காணப்படுகின்ற சமூகங்களுக்கு சேவைசெய்ய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சுதேச வைத்தியமானது எமது நாட்டின் சுகாதாரசேவையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றபோதிலும், ஐந்து வருட தொழில்சார் சுதேசமருத்துவக்கல்வி மற்றும் அதனைத் தொடர்ந்து ஒருவருட உள்ளகப்பயிற்சி போன்றவற்றை நிறைவு செய்யும் நாடளாவிய ரீதியில் தொழில் வெற்றிடங்கள் இருந்தும் கடந்தகால அரசாங்கங்கள் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமலும், மற்றும் நியமனங்களில் அக்கறை செலுத்தாமை போன்ற காரணங்களால் சுதேசவைத்தியர்களின் தொழில்வாய்ப்புக்கள் நிறுத்தப்பட்டு நியமனங்களுக்காக காத்திருப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு சென்றது.

அவ்வாறு இருக்கையில் உயர்கல்வி அமைச்சானது இந்த சுதேச வைத்திய கற்கை நெறிகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்ததன் காரணமாகக் கடந்த ஐந்து வருடங்களில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை 25 தொடக்கம் 50இலிருந்து 120 தொடக்கம் 200 ஆக உயர்வு பெற்றது.

இதனால் வேலைவாய்ப்பின்றிக் காணப்படும் வைத்தியர்களின் எண்ணிக்கை மேலும் கணிசமானஅளவு அதிகரித்துள்ளது. வேலையற்ற சுதேச வைத்தியர்கள் பலதரப்பட்ட இன்னல்களையும் எதிர்நோக்குகின்றார்கள்.

எனவே எமது நாட்டின் சுகாதாரசேவையில் பெரும் பங்கைவகிக்கும் சுதேச மருத்துவ சேவையினை எதிர்காலத்தில் தங்கு தடையின்றி நடத்துவதற்கும் வேலையற்றுக் காணப்படுகின்ற சுதேச மருத்துவர்களுக்கான தொழில் நியமனங்களை வழங்குவதற்கும் இனிவரும் காலங்களில் உள்ளகப் பயிற்சிகளை நிறைவுசெய்து வெளியேறும் சுதேச வைத்தியர்களுக்கான பதவி நியமனங்களை தாமதிக்காது உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# கதிர்காம பாதயாத்திரையினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

## ஒரு மில்லியன் ரூபா நிதியில் வழங்கப்பட்டது

சைவமரபு – பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையினர் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து பாத யாத்திரையை ஆரம்பித்து 48 நாள்கள் கடந்த நிலையில், அம்பாறை மாவட்டம் – குமண வனவிலங்கு சரணாலயத்தின் தொடக்க எல்லையில், அடர்ந்த வனத்துக்குள் அமைந்துள்ள உகந்தை முருகன் ஆலயத்தை வந்தடைந்துள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை யால வனத்தின் வழியாக பாதயாத்திரை மேற்கொள்ளவுள்ள பக்தர்கள், பானம கிராமம், குமண, யால தேசிய பூங்கா போன்ற இடங்களை கடந்து சுமார் 10 நாள்கள் கடினமான வனப் பகுதியை கடந்தே முகாம்கள் அமைக்கப்பட்டு தங்கி பயணம் செய்கின்றனர்.



இவர்களுக்கு 10 லட்சம் ரூபா நிதிச் செலவில் நீர் விநியோகம் மற்றும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# காட்டுப் பாதையில் பாத யாத்திரிகர்களுக்கு குடிதண்ணீருடன் தொண்டு நிறுவனங்கள்

**(வி.ரி. சகாதேவராஜா)**

நாளை (20) வெள்ளிக்கிழமை காலை திறக்கப்படும் கதிர்காமத்துக்கான காட்டுப் பாதையில் செல்லும் பாத யாத்திரிகர்களுக்கு குடிநீர் வழங்க தொண்டு நிறுவனங்கள் விரைந்து கொண்டிருக்கின்றன.

2025 ஆம் ஆண்டுக்கான புனித கதிர்காம பாத யாத்திரை குடிநீர் சேவைக்காக சிவ தொண்டன் அமைப்பு, சேவற்கொடியோன் அமைப்பு, வலம்புரியோன் அமைப்பு என்று பல தொண்டு நிறுவனங்கள் நேற்று நீர்த்தாங்கி கொண்ட உழவு இயந்திரங்கள் சகிதம் உகந்தமலையைசட சென்றடைந்தன.

நாளை முதல் காட்டுப் பாதையில் அவர்களது குடிநீர் வழங்கும் உன்னத ஜீவகாருண்ய சேவை ஆரம்பமாகவுள்ளது.







# குந்தவை கதைகள்-நூல் வெளியீட்டு விழா

தொண்டைமானாற்றைச் சேர்ந்த எழுத்தாளர் இராஜரட்னம் சடாச்சர தேவி எழுதிய 'குந்தவை கதைகள்' நூல் வெளியீட்டு விழா, சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ். சரஸ்வதி மண்டபத்தில், உடுவில் அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் வெளியீட்டு விழா ஆரம்பமாகியது.

நிகழ்வில் பிரபல வர்த்தகரும் சமய, சமூக ஆர்வலருமான வீ. ஆர். தொண்டமநாபன், நூலாசிரியரிடம் இருந்து முதல் பிரதியை பெற்றுக்கொண்ட பின் நூலாசிரியரை பென்னாடை போர்த்தி பாராட்டி கௌரவித்தார்.

வெளியீட்டு உரையை அ. யேசுராசா நிகழ்த்தினார், தொடர்ந்து, இ.இராஜேஸ்கண்ணன், சி.ரமேஷ், ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், எஸ்.குணேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர்.





## பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தெளிவூட்டல் செயலமர்வு





(ஹஸ்பர் ஏ.எச்.)

பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த தெளிவூட்டல் செயலமர்வானது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சீனக் குடா பொலிஸ் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது திருகோணமலை மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸித் வளவாளராக கலந்து கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலும் இதன்போது வழங்கப்பட்டது.

## குன்றுதோறாடும் குமரனைத் தரிசிக்க

# கதிர்காமத்துக்கான கானக பாதயாத்திரை நாளை ஆரம்பம்!





குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்துக்கான 2025 ஆம் ஆண்டுக்கான கானக பாதயாத்திரை நாளை (20) வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகின்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதிகொடியேற்றத்துடன் தொடங்கி ஜுலை மாதம் 11 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்களின் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது.

இந்த முறை காட்டுப் பாதை அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் வைக்கப்படவுள்ளது.

இந்த வேளையில் வடக்கு கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 55 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இந்தப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிக நீண்ட தூர கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர் நேற்று உகந்த மலை முருகன் ஆலயத்தை சென்றடைந்துள்ளனர்.

அவர்களோடு சுமார் 5000 பேரளவில் நாளை வெள்ளிக்கிழமை காலை காட்டுப் பாதையில் பிரவேசிக்கவுள்ளனர்.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம் இது.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாள்கள் பயணிப்பது வழமை.



**விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா**
ஒருங்கிணைப்பாளர்,
யாழ்.சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரைக்குழு.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமண, வியாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாட்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிக்கின்றனர்.

இந்தப் புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிக யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்துக்கே நம்மைக் கூட்டி செல்கிறது.

இந்தக்கதிர்காமபாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப் பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக் கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இந்தப் பாத யாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து

தொடர்ச்சி ▼

# கதிர்காமத்துக்கான கானக பாதயாத்திரை நாளை ஆரம்பம்!

**தொடர்ச்சி ▲**

உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து “சாமி” என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்.

இவை மட்டுமல்ல, இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாத யாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்துக்கு ஒரு முறையாவது பாத யாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாகப் பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் உண்மை.

■



# நிலாவெளியைச் சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்வதற்குக் கலந்தாய்வு!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

நிலாவெளி சுற்றுலாத் தள அபிவிருத்தி தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மாகாண சுற்றுலாப் பணியத்தின் ஏற்பாட்டில் நேற்று (18) திருகோணமலை நிலாவெளி பிரதேசத்துக்கு வருகை தந்த “Ceylon Pedal 2025” International Cycling and u;ealth Awareness குழுவை, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர தலைமையில் வரவேற்று, அவர்களுடன் கிழக்கு மாகாண சுற்றுலா சம்மந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.



இதன்போது அவர்களுக்கு ஒரு நினைவு பரிசும் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலா சம்மந்தமான புத்தகமும் வழங்கப்பட்டன.

# 241 தொன் கழிவுப் பொருள்கள் சிவனொளிபாத மலையில் தேக்கம்

## மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் தெரிவிப்பு

**(மஸ்கெலியா)**

சிவனொளிபாத மலைக்குத் தரிசிக்க வந்தவர்களால் 241 தொன் கழிவுப் பொருள்கள் விட்டுச் செல்லப்பட்டுள்ளன.

நடந்து முடிந்த சிவனடி பாத மலை பருவகாலம் 2024 - 2025 இல் இந்த 6 மாத காலத்தில் நல்லதண்ணி சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்ய வந்த யாத்திரியர்களால் சிவனொளிபாத மலையை அண்டிய வன பகுதியிலும் வீதியிலும் கழிவுகள் 241 தொன் கழிவுகள் விட்டுச் செல்லப்பட்டுள்ளன என்று மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் சிவராஜ் ராஜவீரன் தெரிவித்தார்.

2024 டிசெம்பர் மாதம் முதல் 2025 மே மாதம்வரை உள்ள 6 மாத காலத்தில் இடம் பெற்ற பருவத்தில் உக்கும் பொருள்கள் 178 தொன்னும், உக்காத பொருள்கள் 63 தொன்னும் அடங்கும்.

கடந்த காலங்களை விட இந்த ஆண்டு யாத்திரிகர்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக அளவில் குப்பைகளை விட்டு சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கழிவுகள் அனைத்தும் மஸ்கெலியா பிரதேச சபைக்குச் சொந்தமான ரிக்காடன் கிராமத்தில் உள்ள கழிவுகள் சேகரிக்கும் மையத்துக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு உக்கும் பொருள்கள் அனைத்தையும் உரமாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று செயலாளர் எஸ்.ராஜவீரன் தெரிவித்தார்.






# நில அளவை திணைக்களத்துக்கு புதிய கட்டடம் அமைத்துத் திறப்பு!

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை நில அளவை திணைக் களத்துக்கான புதிய கட்டடம் திறந்து வைக்கும் நிகழ்வு இன்று (19) சம்மாந் துறை பிரதேச நில அளவை அத்தியட் சகர் ஏ.எஸ்.எம் நஜாகத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்குக் கௌரவ அதிதி யாக கிழக்கு மாகாண நில அளவை யாளர் நாயகம் எம்.டி.எம். ரபீக் கலந்து கொண்டதோடு சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலக உத விப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், நில அளவைத் திணைக்களத் தின் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ஜி.ஆர்.எல். பெரேரா, சம்மாந்துறை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பணிப் பாளர் எஸ்.எல். முஸ்தபா, பிரதேச நில அளவை அலுவலக அத்தியட்சகர்கள், நில அளவையாளர்கள், ஏனைய திணைக்களங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்-தக அபேவிக்ரமவின் ஆலோசனையின் பெயரிலும் பிரதேச செயலாளரின் முயற்சியாலும் இந்தக் கட்டடம் அமைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கண்டக்குடாவில் விபத்தில் ஒருவர் பலி!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட கண்டல்குடாவ குறுக்கு வீதி யில் நேற்று புதன்கிழமை (18) இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

இந்தப் பகுதியில் பயணித்த மோட் டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பா-ட்டை இழந்து, வீதியை விட்டு விலகி வீடொன்றின் தடுப்புச் சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

குறித்த விபத்தில் 20 வயதுடைய தலவில பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் கற்பிட்டி வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர்.

# ஈரானிலிருந்து அர்மீனியா வழியாக டில்லி திரும்பினர் இந்திய மாணவர்கள்

ஈரானிலிருந்து அர்மீனியா வழியாக டோகா வந்தடைந்த இந்திய மாணவர்கள் 110 பேர் நேற்று இரவு டில்லி வந்தடைந்தனர். இஸ்ரேல் - ஈரான் இடையே போர் தீவிரம் அடைந்து வருகிறது. ஈரானில் 4,000 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் உள்ளனர். இதில் பாதி பேர் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த மாணவர்கள். இவர்கள் ஈரானில் உள்ள உர்மியா மருத்துவ பல்கலைக்கழகத்தில் பயில்கின்றனர்.

இவர்களை பாதுகாப்பாக தாயகம் அழைத்து வர வேண்டும் என இவர்களின் பெற்றோர் பிரதமர் மோடிக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதையடுத்து ஈரானில் உள்ள இந்தியர்களை அர்மீனியா எல்லை வழியாக அழைத்து வர வெளியுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்தது.

அவ்வாறு டோகா வந்தடைந்த இந்திய மாணவர்கள் 110 பேர் நேற்று இரவு சிறப்பு விமானம் மூலம் டில்லி அழைத்து வரப்பட்டனர். இவர்களில் 90 பேர் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள்.



# அகமதாபாத் விமான விபத்தில் காப்பீடு செய்தவரும் நியமனதாரரும் இறப்பு; இழப்பீடு வழங்குவதில் சிக்கல்

ஏர் இந்தியா விமான விபத்தில் பயணம் செய்த பெரும்பாலான காப்பீட்டுதாரரும், அவர் நியமித்த பரிந்துரையாளரும் ஒன்றாக உயிரிழந்துள்ளனர். இதனால், இழப்பீட்டு தொகையை வழங்குவதில் காப்பீட்டு நிறுவனங்களுக்கு மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜூன் 12 ஆம் திகதி அகமதாபாத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது.

விமானத்தில் பயணம் செய்த 241 பேர், கட்டடத்துக்குள் இருந்த 29 பேர் என மொத்தம் 270 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் குடும்பத்துடன் லண்டன் சென்றபோது இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.



விபத்து ஏற்பட்டவுடன் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐ.ஆர்.டி.ஏஐ), காப்பீட்டு நிறுவனங்களை தொடர்பு கொண்டு காப்பீடு செய்தவர்களுக்கு உடனடியாக இழப்பீடுகளை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இந்த நிலையில் காப்பீடு வழங்குவது தாமதப்படுத்தப்பட்டு வருவதாக எழுந்த குற்றச்சாட்டுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் மறுப்பு தெரிவித்துள்ளன. காப்பீடு எடுத்துக் கொண்ட பாலி சிதாரர் மற்றும் அவரது நொமினி என இருவருமே இந்த விமான விபத் தில் உயிரிழந்ததால் காப்பீட்டு தொகையை யாரிடம் வழங்க வேண் டும் என்பதில் பெரும் சிக்கலை சந்தித்து வருவதாக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# கேதார்நாத் செல்லும் பாதையில் நிலச்சரிவு; இருவர் உயிரிழப்பு

உத்தராகண்ட் மாநிலத்தில் கேதார்நாத் கோயிலுக்கு செல்லும் நடைபாதையில் நேற்று நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் இருவர் உயிரிழந்தனர். 3 பேர் காயம் அடைந்தனர்.

உத்தராகண்ட் மாநிலத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் கேதார்நாத் கோயிலுக்குச் செல்லும் மலையேற்றப் பாதையில் ஜங்கில்சாட்டி காட் அருகே நேற்று காலை 11.20 மணிக்கு நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் அவ்வழியே சென்ற பக்தர்கள் இடிபாடுகளில் சிக்கி ஒரு பள்ளத்தாக்கில் விழுந்தனர். தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் பேரிடர் மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உள்ளூர் மக்கள் உதவியுடன் தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இதில் இருவர் சடலமாக மீட்கப்பட்டனர். மேலும் காயம் அடைந்த ஒரு பெண் உள்ளிட்ட மூவர் மீட்கப்பட்டு கவுரிகுண்ட் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.




இறந்தவர்களை அடையாளம் காணும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஈரான் பதிலடி; ஹைபர்சோனிக் ஏவுகணைகளை வீசியது

இஸ்ரேல் மீது ஃபதா 1' என்ற ஹைபர்சோனிக் ஏவுகணைகளை வீசி ஈரான் நேற்று தாக்குதல் நடத்தி யது. அணு ஆயுத தயாரிப்பை ஈரான் தீவிரப்படுத்துவதாக கூறி, அந்நாடு மீது இஸ்ரேல் கடந்த 13 ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதனால் ஈரா னும் பதிலடி தாக்குதலில் இறங்கியது.

இதில் ஈரானின் இராணுவ தளபதி கள், அணு விஞ்ஞானிகள் உட்பட 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த னர். 2,000 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இஸ்ரேலிலும் உயிரி ழப்பு எண்ணிக்கு 25 ஐ தாண்டிவிட்டது, 600 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில் இருதரப்பினர் இடையே ஏற்பட்டுள்ள போர் நேற்று 6 ஆவது நாளாக தொடர்ந்தது. இதில் ஃபதா 1' என்ற சூப்பர்சோனிக் ஏவுக ணைகளை ஈரான், இஸ்ரேல் மீது வீசியது. ஈரான் இந்த வகை ஏவுக ணையை இஸ்ரேல் மீது வீசுவது



இது முதல் முறை அல்ல. கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி இஸ் ரேலை ஃபதா 1' ஏவுகணை மூலம் இஸ்ரேல் தாக்கியது.

இந்த சூப்பர்சோனிக் ஏவுகணை மேக் 3 வேகத்தில் அதாவது ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் சென்று தாக்கும். மணிக்கு 17,900 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் இந்த ஏவுகணையை நடுவானில் இடைம றித்து அழிப்பது சிரமம். ஃபதா 1' ஏவுகணையை ஈரான் கடந்த 2023 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது.

இதற்கு ஃபதா 1' என ஈரான் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி பெயர் வைத்தார். 12 மீற்றர் நீளமுள்ள இந்த ஏவுகணை 1,400 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும். திட எரிபொரு ளில் இயங்கும் இந்த ஏவுகணை 200 கிலோ வெடிகுண்டை எடுத்துச் சென்று தாக்கும்.

போரை நிறுத்திக் கொள்ளும் இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகளுக்கு உலக நாடுகள் வேண்டுகோள் விடுத் தும் இரு நாடுகளும் தொடர்ந்து மோதிக் கொள்கின்றன. இதனால் இரு தரப்பிலும், குடியிருப்பு பகுதிகள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

ஈரான் மதத் தலைவர் அயத்துல்ல அலி கமேனி எக்ஸ் தளத்தில் விடுத் துள்ள செய்தியில், “கடவுளின் பெய ரில் போர் தொடங்கியுள்ளது. இஸ்ரே லுக்கு வலுவான பதிலடி கொடுக்க வேண்டும். இஸ்ரேலியர்களுக்கு இரக் கம் காட்ட மாட்டோம்” என கூறியுள் ளார். இதனால் இரு நாடுகள் இடையே போர் மேலும் தீவிரம் அடையும் எனத் தெரிகிறது.

# ஈரானை தாக்கும் இஸ்ரேலின் திட்டங்களுக்கு ட்ரம்ப் ஒப்புதல்

ஈரானை தாக்கும் இஸ்ரேலின் திட்டங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையிலான மோதல் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் பின்னணியில் அவர் தமது நிலைப்பாட்டை அறிவித் துள்ளார்.

எவ்வாறாயினும், ஈரான் மீதான தாக்குதலில் அமெரிக்கா இணையுமா? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த டொனால்ட் ட்ரம்ப், 'நான் அதைச் செய்யலாம்,



நான் செய்யாமலும் இருக்கலாம்' என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஈரானைத் தாக்குவது தொடர்பான இறுதி முடிவை அமெ ரிக்கா இன்னும் எட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இஸ்ரேலிய தாக்குதல் களில் அமெரிக்கா இணையுமாயின் ‘சரி செய்ய முடியாத தீங்கு ஏற்படும்’ என்று ஈரான் உயர் தலைவர் எச் சரித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் - ஈரான் போர் வலுவடைந்து வரும் நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை யின் அவசர கூட்டம் ஒன்று நாளை இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள் ளதாக இஸ்ரேல் தூதுவர் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளார்.





# காசா - இஸ்ரேல் தாக்குதல்: அதிகரிக்கும் பலி எண்ணிக்கை

காசா முழுவதும் நேற்று இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்க ளில் 47 பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி பாரவூர்திகளுக்காக காத்தி ருந்த 11 பேரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குகின்றனர் என பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

காசா மீதான இஸ்ரேலின் தாக்கு தல்களில் உதவிகளைப் பெறுவதற் காக காத்திருந்தவர்கள் நாளாந்தம் கொல்லப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இந்தநிலையில், நேற்று மத்திய காசாவிலுள்ள மகாசி முகாம், தெற் குப்பகுதியிலுள்ள அல்-மவாசி முகாம், ஜெய்டுன் பகுதியிலுள்ள குடியிருப்புகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளது.


இந்த தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என காசா சுகாதார அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இதனிடையே, ஹமாஸின் இராணு வத்தின் இயலுமையை இல்லா தொழிப்பதற்காகவே தாக்குதல்கள் நடத்தப்படுவதாக இஸ்ரேல் இரா ணுவம் தெரிவித்துள்ளது.

கனடா முரசு

வியாழக்கிழமை | 19/06/2025

திருட்டு சம்பவம்; இருவர் கைது



02




# நரேந்திர மோடி – மார்க் கார்னி சந்திப்பு; கனடா – இந்தியா உறவில் முன்னேற்றம்

**கனடாவில் நடைபெற்ற ஜி 7 உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கனடா பிரதமர் மார்க் கார்னியும் சந்தித்துப் பேசிக்கொண்டதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்குமிடையிலான தூதரக உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது.**

**கனடாவில் நடைபெற்ற ஜி 7 உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கனடா பிரதமர் மார்க் கார்னியும் சந்தித்துப் பேசிக்கொண்டார்கள்.**

அதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் மீண்டும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கனடாவும் இந்தியாவும் மீண்டும் புதிய உயர் ஸ்தானிகர்களை நியமிக்க சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்திய வெளியுறவுத்துறைச் செயலரான விக்ரம் மிஸ்ரி இது குறித்து பேசும்போது, உயர் ஸ்தானிகர்களை மீண்டும் நியமிக்க இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. இரு நாடுகளுக்கிடையிலான மிக முக்கியத்துவம் வாய்ந்த உறவின் நிலைத்தன்மையை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முதல் படியாகும் என்று கூறியுள்ளார்.

கனடாவின் முந்தைய பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ ஆட்சியின்போது, காலிஸ்தான் ஆதரவு பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்பவர் கொல்லப்பட்ட விடயத்துடன் இந்தியாவை தொடர்பு படுத்த கனடா அரசு முயன்றதைத் தொடர்ந்து இரு



நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவு பாதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, இந்தியா கனடாவுக்கான தனது உயர் ஸ்தானிகரையும், ஐந்து தூதரக அதிகாரிகளையும் திருப்பி அழைத்துக்கொண்டதுடன், கனேடிய தூதரக அதிகாரிகளையும் வெளியேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இருநாடுகளுக்கிடையிலான தூதரக உறவு பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வர்த்தகம் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், இந்திய பிரதமர் மோடி மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னியின் சந்திப்பைத் தொடர்ந்து, மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடரவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன என மிஸ்ரி தெரிவித்துள்ளார்.




# மாடியிலிருந்து விழுந்த சிறுமி ஒருவர் படுகாயம்

கனடாவின் நோர்த் யார்க் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது மாடிச் ஜன்னலிலிருந்து விழுந்த சிறுமி ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டொராண்டோ அவசர மருத்துவ குழுவினர் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

பிகின் கோர்ட் மற்றும் விக்டோரியா பார்க் அவென்யூ சந்திப்பின் அருகே, எக்லிங்டன் அவென்யூ ஈஸ்டிற்குத் தெற்கே உள்ள ஒரு குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தகவலறிந்த அவசர உதவி பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

குழந்தை விழுந்தபோதும் உணர்வுடன் இருந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தை தீவிரமாக காயமடைந்தாலும் உயிருக்கு ஆபத்தில்லை என்று மருத்துவ ஊழியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



# உயிர் வாழ தகுதியான நகரங்களின் பட்டியலில் கனடாவின் முக்கிய நகரம்

உலகில் உயிர் வாழ மிகவும் தகுதியான நகரங்களின் பட்டியலில் கனடாவின் வான்கூவர் நகரம் இடம் பிடித்துள்ளது.

இதில் முதல் இடத்தை டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகன் தன்வசப்படுத்தியுள்ளது.

எகனாமிஸ்ட் இதழின் இன்டலிஜென்ஸ் யுனிட் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. உலக அளவில் 173 நகரங்களில் ஆய்வு நடத்தி, தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் தெரிவான முதல் 10 நகரங்களின் பட்டியல் பின்வருமாறு,

01.கோபன்ஹேகன், டென்மார்க்
02.வியன்னா, ஒஸ்திரியா
03.சூரிச், சுவிட்சர்லாந்து
04.மெல்பேர்ன், அவுஸ்திரேலியா
05.ஜெனீவா, சுவிட்சர்லாந்து
06.சிட்னி, அவுஸ்திரேலியா
07.ஒசாகா, ஜப்பான்
08.ஒக்லான்ட், நியூசிலாந்து
09.அடிலெய்ட், அவுஸ்திரேலியா
10.வான்கூவர், கனடா

## திருட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் பீல் பிராந்தியத்தில் மூன்று லட்சம் டொலர் பெறுமதியான திருட்டில் ஈடுபட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பீல் பிராந்திய இந்த இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

பிராம்ப்டனைச் சேர்ந்த இரு ஆண்கள், எல்.சி.பி.ஓ மது கடைகளில் திட்டமிட்ட அடிப்படையில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இரண்டு ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த திருட்டுகளால் ஏற்பட்ட மொத்த நஷ்டம் சுமார் 3 லட்சம் கனடிய டொலர் ஆகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருட்டுகள் எப்போது, எத்தனை கடைகளில் நடந்தன என்பது தெளிவாக வெளியிடப்படவில்லை.

விசாரணையின் விளைவாக, சந்தேகநபர்களுக்கு மொத்தம் 35 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 25 வயதான அனுஜ் குமார் என்ற நபர் இந்த சம்பவத்தின் பிரதான சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

29 வயதான சிமர்ப்ரீத் சிங் என்ற நபர் திட்டமிட்ட வகையில் நடந்த திருட்டுகளில் பங்கேற்றதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் சந்தேக நபர்கள் கைது செய்யப்படலாம் என்றும், வழக்கில் மேலும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படலாம் என்றும் அறிவித்துள்ளது.




# டொரொண்டோவில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் ஒருவர் பலி

கனடாவின் டொரொண்டோ நகரின் கிழக்கு பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டொரொண்டோ பொலிஸார் இந்த சம்பவம் பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம், டான்ஃபோர்த் மற்றும் ஹில்லிங்டன் அவென்யூவுகளுக்கு அருகிலும், காக்ஸ்வெல் அவென்யூ அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

20 வயதுக்கு உட்பட்ட இளைஞர் கத்திக்குத்தில் படுகாயமடைந்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

எனினும், தீவிர சிகிச்சை அளித்தும் அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை தற்போது நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# கனடாவின் மக்கள் தொகை மிகவும் வீழ்ச்சியடைந்தது

2025 முதல் காலாண்டில் கனடாவின் மக்கள் தொகை வளர்ச்சி மிகவும் மந்தமாகியுள்ளது என புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி 1 முதல் ஏப்ரல் 1 வரையிலான காலத்தில், கனடாவின் மொத்த சனத்தொகை வெறும் 20,107 இல் மட்டுமே அதிகரித்துள்ளனர்.

இதன் மூலம் நாட்டின் மொத்த மக்கள் தொகை 41,548,787 ஆக உயர்ந்துள்ளது. இது 2020-இன் மூன்றாவது காலாண்டுக்குப் பின் காணப்படும் மிகக் குறைந்த வளர்ச்சியாகும்.

இந்த தரவுகள், 2024-ஆம் ஆண்டு கனடா மத்திய அரசு தற்காலிக மற்றும் நிரந்தர குடியேற்ற அளவுகளை குறைக்கும் முடிவெடுத்ததற்குப் பின் ஆறாவது தொடர் காலாண்டாக மக்கள் தொகை வளர்ச்சி பின்னடைந்துள்ளதைக் காட்டுகின்றன.

இந்த காலாண்டில் பிறப்புகளை விட இறப்புகள் அதிகமாக இருந்தாகவும், 5,628 பேர் அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் 104,256 புதிய குடியிருப்பாளர்கள் நாட்டில் இணைந்து கொண்டுள்ளனர். 17,410 பேர் நாடுவிட்டு வெளியேறிய தால், குடியேற்றத்தின் நிகரப் பலன் சிறிதளவு குறைந்தது.